සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025/ Second Term Test - 2025

| ශ්‍රේණිය / தரம் / Grade | வரலாறு - I | කාලය / நேரம் / Time |
|---|---|---|
| 11 | | 01 மணி. |

නම / பெயர் / Name ..........................................................................................  විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ........................................

☆ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

☆ 1 – 40 வரையான வினாக்களில் வழங்கப்பட்டுள்ள விடைகளில் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

01. மகாவம்ச டீகாவ எனப்படும் விளக்க உரை நூலுக்கு எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.
1. வம்சத்தப் பகாசினி
2. உத்தரவிஹார அட்டகதா
3. வியை அட்டகதா
4. சிஹல அட்டகதா

02. கோட்டை காலத்தில் எழுதப்பட்ட பெரகும்பா சிரித்த எனும் காவிய நூல் எவ் இலக்கிய வகைக்குரியது ?
1. போர்க்காவியம்
2. புகழ் காவியம்
3. வீர காவியம்
4. தூது காவியம்

03. இந்நாட்டின் அரசியல் தகவல்களை அடக்கியுள்ள மூலாதாரம் எது ?
1. நிகாய சங்கிரகய
2. ராஜாவலிய
3. போதி வம்சம்
4. பூஜாவலிய

04. கரையோர வெட்ட வெளிகளில் அடங்காதது
1. பூந்தல
2. மினிகாஹல்கந்த
3. அலிகவ
4. பதிராஜெவல

05. முன்வரலாற்றுக் காலத்திற்குரிய அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம் கண்டெடுக்கப்பட்ட இடம்
1. கல்சொஹன
2. பட்டதொம்பலென
3. பதிராஜவல
4. ஹல்துமுல்ல

06. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாபிகாம குளக் குடியேற்றத்திற்கு உதாரணம் அல்லாதது
1. விஹார வாபிகாம
2. மணிகார வாபிகாம
3. சுமண வாபிகாம
4. கடஹ வாபிகாம

07. தசகம் எத்தன் எனும் பத்து கிராமப் பிரதானிகளின் சபை பற்றி குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு எது ?
1. அம்பகமுவ கல்வெட்டு
2. பதுளை தூண் கல்வெட்டு
3. களுதிய பொகுண கல்வெட்டு
4. சங்கமு விகாரை கல்வெட்டு

08. துட்டகைமுனு மன்னனின் யுத்த நடவடிக்கைகளில் பங்கேற்ற தளபதிகளுள் ஒருவர்
1. ரவிதேவ
2. வல
3. பல்லூக
4. நந்திமித்ர

09. வல்லிபுர பொற்சாசனத்தில் குறிப்படப்பட்டுள்ள யாழ் குடாநாடு பண்டைய காலத்தில் எவ்வாறு அழைக்கப்படது ?
1. கந்தரோடை
2. நகதிவ
3. அகநகரம்
4. நகநகரம்

10. அலகபய மகாராஜா என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அரசன் யார் ?
1. மகாசேன மன்னன்
2. குட்டகண்ண அபய மன்னன்
3. முதலாம் காசியப்ப மன்னன்
4. நிஸ்ஸங்கமல்ல மன்னன்



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers  Model Answers - Study Resources

11. அநுராதபுர காலத்தில் "சபாவ" என குறிப்பிடப்பட்டிருந்த தாபனம் எது ?
    1. நீதிமன்றம்  2. அரச சபை  3. எந்தன் சமிய  4. எக ஆஸ்தான

12. காய்ச்சலால் பீடிக்கபட்ட நோயாளர்களுக்கென தனியான வைத்தியசாலை ஒன்றை நிறுவிய மன்னன் யார்?
    1. நான்காம் காசியப்ப மன்னன்  2. மூன்றாம் காசியப்ப மன்னன்
    3. இரண்டாம் பராக்கிரமபாகு  4. ஐந்தாம் மஹிந்த மன்னன்

13. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெஹெரகெம எனும் இடத்தில் காணப்பட்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில் எது ?
    1. ததவய  2. மணிகர  3. தடிக  4. துலாதார

14. இந்நாட்டின் கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள பண்டைய துறைமுகம் ?
    1. ஜம்புகோளப்பட்டினம்  2. மகாதித்த  3. லங்காப்பட்டினம்  4. கொடவாய

15. இரும்புச் சூளை எரிவதற்கு ஊதுளை எனும் கருவி மூலம் வளி பெற்றுக்கொள்ளப்பட்ட இடம்
    1. தெஹிகஹ அலகந்த  2. சமலை வெவ  3. பெரகல  4. பொம்பரிப்பு

16. தெடிகம யானை விளக்கு கண்டெடுக்கப்பட்ட இடம்
    1. தம்பதெனிய  2. பண்டுவஸ்நுவர  3. புங்ககாம  4. ரஜகல

17. அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காகச் செலுத்தப்பட்ட வரி
    1. தக்கபதி  2. மதரமஞ்சக்க
    3. போஜக்கபதி  4. மாத்ரிக்க மத்சய பாகய

18. "படுகொலைச் சட்டம்" எம் மன்னனின் காலத்தில் செயற்படுத்தப்பட்டது
    1. நான்காம் மகிந்தன்  2. நிஸ்ஸங்கமல்ல மன்னன்
    3. இரண்டாம் முகலன்  4. ஆமண்ட காமினி அபய

19. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் "மதுபாச்சிகா" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நூல்
    1. தம்பியா அட்டுவா கெட்டபத  2. சகஸ்தவஸ்துவ
    2. சத்தர்மலங்காரய  3. சத்தர்மரத்ணாவலிய

| அரசன் | ஆக்கிரமிப்பாளர் | வரலாற்று நிகழ்வுகள் |
|---|---|---|
| A- பராக்கிரம பாண்டிய | B- சந்திரபானு | C- பொலன்னறுவை இராச்சியத்தின் கடைசி மன்னன் |
| D- இரண்டாம் பராக்கிரமபாகு | E- கலிங்க மாகன் | F- பெலிகலையில் தலதா மாளிகை அமைத்தல் |

20. பொலன்னறுவை இராசதானியுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கும் விடை
    1. A,E மற்றும் C  2. A,B மற்றும் F  3. D,E மற்றும் F  4. A,E மற்றும் F

21. தம்பதெனிய இராசதானியுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கும் விடை
    1. D,A மற்றும் C  2. D,B மற்றும் F  3. D,E மற்றும் C  4. A,E மற்றும் C

22. கம்பளைக் காலத்திற்குறிய காவிய நூல்களில் அடங்காதது.
    1. பாரமீ சதகய  2. ஜினபோதாவலி  3. சத்தர்மாலங்காரய  4.தலதா பூஜாவலிய

23. கண்டி இராச்சியத்தில் நாயக்க வம்ச ஆட்சியாளர்கள் கடைபிடித்த அரச மரபுரிமையானது எது ?
    1. அரசியின் சகோதரனுக்கு அரசு உரிமை வழங்குதல்.  2. தந்தையின் பின் மகன் அரசனாதல்.
    3. அரசனின் பின் மகாராணி அரசியாதல்.  4. அரசனின் பின் மூத்த சகோதரன் அரசனாதல்.


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

24. கண்டி இராச்சியத்தின் நிலம் உரிமையையும் அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு வகைப் படுத்தப்பட்டிருந்ததில், அரச மாளிகையின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலம் எவ்வாறு குறிப்பிடப்பட்டது ?
1. தேவாலகம் 2. பரவேனிகம் 3. கபடாகம் 4. விகாரகம்

25. ஞாயிற்றுத் தொகுதிக் கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றிவருவதாக கண்டுபிடித்தவர் ?
1. ஐசாக் நியூட்டன் 2. கலிலியோ கலிலி
3. நிக்கலஸ் கொப்பர்னிகஸ் 4. ஜொஹென்னஸ் கெப்லர்

26. கிழே தரப்பட்டுள்ள A-E வரையான தகவல்களுள் புதிய வர்த்தக பாதைகளை கண்டுபிடிப்பதற்கு சாதகமாக அமைந்த காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடை யாது ?
A- பாதுகாப்பாக கடற்பிரயாணம் செய்யக்கூடிய திசையறிகருவி, வட நட்சத்திரமாணி என்பன கண்டுபிடிக்கப்பட்டமை.
B- மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான முக்கிய தகவல்களை கண்டுபிடித்தல்.
C- தொலமியின் உலகப்படத்தின் மூலம் உலகம் பற்றிய தெளிவான விளக்கம் கிடைத்தமை.
D- புவியீர்ப்புச் சக்தியை கண்டுபிடித்தமை.
E- புவி கோளவடிவமானது என்பது அறியப்பட்டமை

1. A,C மற்றும் E 2. A,B மற்றும் D 3. B,C மற்றும் E 4. B,D மற்றும் E

27. கப்பித்தான் ஜெனரல் தியோகோ த மெல்லோவும் கொல்லப்பட்டதுடன் போர்த்துக்கேயரும் படுதோல்வி அடைந்த போர் எது ?
1. பலனைப் போர் 2. தந்துறைப் போர்
3. கன்னொறுவப் போர் 4. ரந்தெனிவெலப் போர்

28. கி.பி. 1602 இல் இலங்கைக்கு வந்து முதலாம் விமலதர்ம சூரிய மன்னனைச் சந்தித்த ஒல்லாந்தத் தூதுவர்
1. சிபல் த வாட் 2. ஜோரிஸ்வான் ஸ்பில் பேர்ஜன்
3. வெஸ்டர் வோல்ட் 4. கொன்ஸ்தாந்தினு தசா

29. இரும்பிலிருந்து கழிவுகளை அகற்றி உருக்கு உற்பத்தி செய்யும் முறையை கண்டறிந்தவர்
1. ரிச்சர்ட்ட ஆர்க்ரைட் 2. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ்
3. ஹென்றி பேஸ்மர் 4. சாமுவேல் மோர்ஸ்

கீழே A முதல் E வரை கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகளை உள்ளடக்கிய விடயங்கள் தரப்பட்டுள்ளன.
A- சூழல் மாசடைதல்
B- சேரிப்புறங்கள் உருவாகுதல்
C- கைத்தொழில் துறையில் மக்களுக்கு அதிக வேலைவாய்ப்புக் கிடைத்தல்.
D- ஒல்லாந்த நீதிமன்ற முறை கொண்டுவரப்படல்
E- நிதி மற்றும் வங்கி நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படல்.

30. கைத்தொழில் புரட்சியின் பாதக விளைவுகளை மாத்திரம் உள்ளடக்கும் விடை ?
1. C மற்றும் E 2. C மற்றும் D 3. A மற்றும் E 4. A மற்றும் B

31. கைத்தொழில் புரட்சியின் சாதக விளைவுகளை மட்டும் உள்ளடக்கும் விடை ?
1. C யும் E யும் 2. A யும் B யும் 3. C யும் D யும் 4. A யும் C யும்

32. ஒல்லாந்த ஆட்சியாளரான ஸ்டெத் ஹோல்டர் எழுதிய கியூ கடிதத்தை வழங்கும் போது இலங்கையிலிருந்த ஒல்லாந்த ஆளுனர் யார் ?
1. ஜோன் டொயிலி 2. பன் எங்கல் பெக் 3. ஜோன் பைபஸ் 4. ஹியூ பொயிட்


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

33. 1848 சுதந்திர போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணிகளுள் அடங்காதது.
   1. போராட்டம் முறையாக ஒழுங்குபடுத்தப்படாமை
   2. நவீன ஆயுதங்களோ, படைப்பயிற்சியோ காணப்படாமை.
   3. அரசனாகத் தோன்றிய துரைசாமி அரசுரிமையற்ற போலியானவன் என்று தெரியவந்தமை.
   4. இப் போராட்டம் மலைநாட்டின் சில பிரதேசங்களுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்பட்டிருந்தமை.

பின்வரும் A,B,C,D என்று குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சோடியிலும் முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையிலுள்ள தொடர்பினை பரிசீலித்து இல 34 தொடக்கம் 36 வரையான வினாக்களுக்கு விடை தருக

A- 1. பகிரங்க விவாதங்கள் நடத்தல்
   2. பாணந்துறை விவாதம்

B- 1. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்
   2. இலங்கை தேசிய சங்கம் அமைத்தல்

C- 1. கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபர்
   2. அறிஞர் சித்திலெப்பை அவர்கள்

D- 1. அராபி பாஷா
   2. எகிப்து நாட்டிலிருந்து வருகை தரல்

34. முதலாவதின் விளைவாக இரண்டாவது அமைந்ததைக் குறிப்பிடும் சோடி எது ?
   1. D  2. C  3. B  4. A

35. முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையில் எத்தகைய தொடர்பையும் குறிப்பிடாத சோடி எது ?
   1. C  2. B  3. A  4. D

36. "முஸ்லிம் நேசன்" எனும் பத்திரிகையை ஆரம்பித்தவர்
   1. சித்தி லெப்பை  2. ஆறுமுக நாவலர்
   3. பொன்னம்பலம் இராமநாதன்  4. பொன்னம்பலம் அருணாச்சலம்

பிரித்தானியரால் இலங்கைக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு 37 ஆம் 38 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A- இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படுதல்.
B- சட்டவாக்கக் கழகத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை.
C- சட்டசாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பன அமைக்கப்பட்டன.
D- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானமை.

37. கோல்புறுக் சீர்திருத்த முன்மொழிவுகளை மட்டும் குறிப்பிடும் விடை எது ?
   1. A யும் B யும்  2. A யும் C யும்  3. B யும் D யும்  4. C யும் D யும்

38. மனிங் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சத்தை குறிப்பிடும் விடை யாது ?
   1. D  2. C  3. B  4. A

39. இலங்கையின் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
   1. தலவாக்கலை  2. லுணுவில  3. அகலவத்தை  4. கம்பளை

40. பிரித்தானிய ஆட்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற எதிர்மறையான அம்சமாவது
   1. ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர்களை அறிமுகம் செய்தமை
   2. பாராளுமன்ற ஆட்சி முறை
   3. கைத்தொழில் புரட்சியின் நன்மைகளை இலங்கையும் பெற்றமை.
   4. காணி உரிமையற்ற மக்கள் கூட்டம் உருவானமை.


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

**දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**தென் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Department of Education, Southern Province**

**දෙවන වාර පරීක්ෂණය - 2025**
**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025/ Second Term Test - 2025**

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | வரலாறு - II | කාලය / நேரம் / Time | 03 மணி. |
|---|---|---|---|---|

නම / பெயர் / Name .............................................................................. විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ....................................

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

☆ **பகுதி I முதலாம் வினா கட்டாயமானது**
☆ **பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும் பகுதி III ல் ஒரு வினாவுக்கும் விடை தருக.**
☆ **விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆறு ஆகும்.**

## பகுதி I

01. (அ) வினா I ல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் வினா II ல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை தரப்பட்டுள்ள உலக புறவுருவப் படத்திலும் குறித்துக் காட்டுக

I. மாகம, மின்னேரியா, கோனேஸ்வரம், குருநாகல், கோதபப்பத, கந்தரோடை, களனி கங்கை, பிதுரன்கல, யான் ஓயா, பொம்பரிப்பு, மாதுறு ஓயா நீர்த்தேக்கம், கயிட்ஸ் தீவு (12 புள்ளிகள்)

II. லண்டன், பாம்பாய், அரபிக் கடல், தாய்வான், கல்கத்தா, மலாக்கா நீரினை (6 புள்ளிகள்)

(ஆ) கீழே A,B,C மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. பண்டைய சமூகத்தில் அரசனுக்கு நெருங்கிச் செயற்பட்ட அரச அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
B. யாப்பகுவ இராசதானிக் காலத்தில் புனித தந்ததாதுவை இந்தியாவிற்கு கொண்டு சென்ற பாண்டிய ஆக்கிரமிப்பாளர் யார் ?
C. கி.பி. 1865ல் இலங்கையர் சங்கத்தை தோற்றுவிப்பதில் தலைமைத்துவவம் வகித்தவர் யார் ?
D. குவினைன் என்னும் மருந்து தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மூலிகைப் பயிர் எது ?

(4 புள்ளிகள்)

(இ) கீழே A மற்றும் B யில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக ?

I. படத்தில் காட்டப்படுவது யாது ?
II. இது எந்த இராசதானி காலத்துக்குறியது ?
III. இந்தப் படம் அமைந்துள்ள விகாரை எது ?
IV. அந்த விகாரை அமைந்துள்ள மாகாணம் எது ?

(4 புள்ளிகள்)



A படம்



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

I. இப்படத்தில் காட்டப்பட்டுள்ளவர் யார் ?
II. அவரால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை எது ?
III. அவரால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை எது ?
IV. அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் ?


B படம்

(4 புள்ளிகள்)

## பகுதி II

02. I. கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றினைப் பெயரிடுக ? (3 புள்ளிகள்)

II. இலங்கையின் முன்வரலாற்றுக் காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு உதவும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. A- ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய பிராதன காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

B- மேற்குறிப்பிட்ட குடியிருப்புப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் ஒன்றை குறிப்பிட்டு விளக்குக. (2 புள்ளிகள்)

IV. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் நிலவிய குடியேற்றத்தின் கட்டமைப்பும், தன்மையும் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.

1. குடியிருப்புக்களின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமும். (6 புள்ளிகள்)

03. I. கி.பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்து 13 ம் நூற்றாண்டு வரை இந்நாட்டில் செயற்பட்ட தென்னிந்திய வர்த்தக அமைப்புக்கள் மூன்று தருக ? (3 புள்ளிகள்)

II. பின்வரும் A,B,C மற்றும் D வரையிலான கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A- "தொட்டபோஜக" எனும் பருமக பற்றி குறிப்பிட்டுள்ள கல்வெட்டு எது ?

B- இலங்கையில் அரச அதிகாரம் மத்தியமயப்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பித்த ஆட்சியாளர் யார் ?

C- பண்டைய காலத்தில் சட்டங்கள் சம்பந்தமான துறைபோனவர்கள் எவ்வாறு குறிப்பிடப்பட்டனர். ?

D- சேனைப் பயிர்ச்செய்கையில் அறிவிட்ட கெதிஅட, கெடுகனக வரிகள் எம்மன்னனின் காலத்தில் நீக்கப்பட்டது. ? (4 புள்ளிகள்)

III. முதலாம் விஜயபாகு மன்னன் நாட்டை ஒன்றுபடுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. இலங்கை ஆட்சியாளர்கள் பண்டைய காலத்தில் வெளிநாடுகளுடன் மேற்கொண்ட நற்புறவுகளை உதாரணங்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04. I. பின்வரும் அரசர்களால் அமைக்கப்பட்ட குளங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. 2ம் முகலன் மன்னன்
2. மகாசேன மன்னன்
3. தாதுசேன மன்னன்

(கலா வாவி, பதவியா குளம், கவுடுளு வாவி, ஹிரிவடுன்ன குளம்) (3 புள்ளிகள்)

II. குளத்தொகுதி (எல்லங்காவ) ஒன்றை உருவாக்குவதில் எதிர்பார்த்த இரண்டு நோக்கங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. இலங்கையின் புராதன விஞ்ஞான தொழிநுட்பத்தின் ஆரம்பக்கட்டத்தை பின்வரும் விடயங்களின் கீழ் விளக்குக.

A- வீடமைப்புத் திட்டம்

B- மட்பாண்டங்கள் தயாரித்தல் (5 புள்ளிகள்)

IV. குளமொன்றின் முக்கியமான கூறுகள் இரண்டைக் குறிப்பிட்டு, அதன் நிர்மானிப்பு, செயற்பாடுகள் என்பன பற்றி விளக்குக. (6 புள்ளிகள்)


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

05. I. மலையக இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக ? (3 புள்ளிகள்)

II. மலையக இராச்சியத்தில் மன்னனால் விசாரிக்கப்படும் வழக்குகள் நான்கைக் குறிப்பிடுக ? (4 புள்ளிகள்)

III. போர்த்துக்கேயர் மலையக இராச்சியத்தை கைப்பற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தமையில் தாக்கம் செலுத்திய காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. கண்டி இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கமைப்பு செயற்படுத்தப்பட்டிருந்த விதத்தை மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக ? (6 புள்ளிகள்)

06. I. கிழே A,B,C என்பவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A- கி.பி. 1815 மலையகத்தை கைப்பற்றுவதற்கான பின்புலத்தை ஏற்படுத்திய அரச உத்தியோகத்தர் யார் ?

B- கி.பி. 1848 இல் புதிய வரிகள் பலவற்றை செயற்படுத்திய ஆங்கிலேய ஆளுநர் யார் ?

C- கி.பி. 1908 ல் முதல் தடவையாக யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாக கோரிக்கை ஒன்றை குடியேற்ற நாடுகளின் செயலாலரிடம் ஒப்படைத்த தலைவர் யார் ? (3 புள்ளிகள்)

II. இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்தின் மீது பிரித்தானியரின் கவனம் ஈர்க்கப்பட்டதற்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. பிரித்தானியரால் கண்டி இராச்சியம் மீதான படையெடுப்பு மேற்கொள்வதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக ? (5 புள்ளிகள்)

IV. கி.பி. 1848 இரண்டாம் சுதந்திரப் போருக்கு வழிவகுத்த கோல்புறுக் சீர்திருத்தத்தின் அம்சங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக ? (6 புள்ளிகள்)

07. I. கீழே தரப்பட்டுள்ள யாப்பு சீர்திருத்தங்களின் கீழ் சட்ட சபையினை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பெயர்களைத் தருக ?

A- 1931 டொனமூர் யாப்பு

B- 1972 முதலாம் குடியரசு யாப்பு

C- 1978 இரண்டாம் குடியரசு யாப்பு (3 புள்ளிகள்)

II. கீழே தரப்பட்டுள்ள அரசியல் கட்சிகளை உருவாக்கிய தலைவர்களைக் குறிப்பிடுக

A- ஐக்கிய தேசியக் கட்சி

B- இலங்கை சுதந்திரக் கட்சி

C- தொழிலாளர் கட்சி

D- இலங்கை கமயூனிஸ்ட் கட்சி (4 புள்ளிகள்)

III. A- 1978 யாப்புச் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வாக்களிப்பு முறைகள் மூன்றை பெயரிடுக ? (5 புள்ளிகள்)

B- மேலே நீர் குறிப்பிட்ட வாக்களிப்பு முறைகளில் ஒன்றை சுருக்கமாக விளக்குக.

IV. சுதந்திரத்தின் பின்னர் மூன்று தசாப்தகாலத்தினுள் இந்நாட்டுக் கைத்தொழில் துறையில் துலக்கலாகத் தெரியும் பண்புகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

## பகுதி III

08\. I. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் இங்கிலாந்தில் தோன்றிய எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக ? (3 புள்ளிகள்)

II. கிழே A,B,C,D வரை தரப்பட்டுள்ள நிர்மானிப்புக்களுடன் தொடர்புடையவர்களை பெயரிடுக.

A- மொனாலிசா ஓவியம்

B- தாவீதின் உருவம்

C- அச்சு இயந்திரம்

D- தொலைநோக்கி (4 புள்ளிகள்)

III. மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பாவின் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. ஐரோப்பிய மறுமலர்ச்சியினால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக பண்பாட்டு அம்சங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

09\. I. பிரித்தானியாவின் நிலக்கரிப்படிவுகள் அதிகம் காணப்பட்ட பிரதேசங்கள் மூன்று தருக ? (3 புள்ளிகள்)

II. 19 ம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி ஏனைய நாடுகளில் பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக ? (5 புள்ளிகள்)

IV. கைத்தொழில் புரட்சியினால் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட ன்னேற்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக ? (5 புள்ளிகள்)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය<br>தரம்<br>Grade | 11 | ඉතිහාසය - வரலாறு - History - II |

නම
பெயர்
Name ..........................................................................................

විභාග අංකය
சுட்டிலக்கம்
Index No. ..........................................





www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources
iexamhub

| ශ්‍රේණිය<br>தரம்<br>Grade | 11 |
|---|---|

# ඉතිහාසය - வரலாறு - History - II

නම
பெயர்
Name ........................................................................................

විභාග අංකය
சுட்டிலக்கம்
Index No. ........................................






iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources